**மஹவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 17 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 11 காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் செலவினக் கடன்கெடுத்தோர் மீதி ரூபா 1,065,225 ஆக இருந்த போதும் கடன்கொடுத்தோர்/ அட்டவணைகளின் மீதிகள் ரூபா 660,654 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 404,571 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடு ஒப்பிடப்பட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிக்கூற்றுக்களிலும் கடன்கொடுத்தோர் அட்டவணைகளிலும் தகவல்களில் வேறுபாடு உள்ளதாக ஏற்றுக்கொள்வதுடன் அந்நிலைமை எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | ரூபா 43,500,123 பெறுமதியான 09 கணக்கு விடயங்களுக்குரிய | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் | கணக்காய்விடமிருந்து எழுத்துமூல |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடுகள் / ஆவணங்கள் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சான்றுகள் இல்லையென சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் இது தொடர்பான உறுதிப்படுத்தப் பட்டதன் பின்னர் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும் |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) விதி 33 | கொடுப்பனவை தவிர்க்கும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் ஆதனங்களை தடை செய்யும் பிடியாணை என்பன ஒவ்வொரு ஆண்டு இறுதியின் போதும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகள், பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் உருவாகாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) விதி 218 | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவையேனும் பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகள், பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் உருவாகாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் உருவாகாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,682,032 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,884,906 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 5,804,712 | 5,641,448 | 4,601,969 | 4,065,414 | 4,880,275 | 5,773,310 | 4,917,781 | 3,036,671 |
| ii. | வாடகை | 12,375,000 | 12,642,792 | 12,549,490 | 186,182 | 12,875,000 | 10,620,991 | 10,979,715 | 133,231 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 956,000 | 880,710 | 880,434 | - | 846,000 | - | 917,759 | - |
| iv. | ஏனைய வருமானம் | 106,272,000 | 76,439,538 | 62,259,370 | 78,642,869 | 18,341,000 | - | 18,764,386 | 43,306,407 |
| | மொத்தம் | 125,407,712 | 95,604,488 | 80,291,263 | 82,894,465 | 36,942,275 | 16,394,301 | 35,579,641 | 46,476,309 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,827,256 தொகையான வீதவரி நிலுவை | நிலுவை வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,651,635 வரை அதிகரித்திருந்தது. | வேண்டும். |

### 2.2.3 வாடகை மற்றும் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,775 நிலுவை வரி 2008 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலம் தொடக்கம் காணப்பட்ட நிலுவையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை ரூபா 183,407 ஆகும். | கிடைக்க வேண்டிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட பொது உப வதிகளை சபையினால் பின்பற்றப்பட்டிருந்தாலும் சபையின் தேவைக்கு ஏற்ப உப விதி பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் தேவைக்கு ஏற்ப உப விதிகள் பிறப்பிக்கப்படுவதற்கும் சபை ஏற்றுக் கொண்ட உப விதிக்கமைய செயலாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகள் பிறப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இனங்காணப்பட்ட 04 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் அரசின் ஓய்வூதிய நிதியக் கணக்கிற்கு செலுத்த வேண்டிய கணக்கிற்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதி ரூபா 4,012,763 ஆக இருந்தது. | இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத்தொகை கொடுப்பனவு எந்த ஊழியருக்காக என உறுதிப்படுத்தலொன்று வழங்குமாறு வேண்டுகோளொன்று கோரப்பட்டிருந்த போதும் அது கிடைக்காமையால் கொடுப்பனவு தாமதமடைந்திருந்தது. அவ்வாறான பாரிய தொகையொன்று ஒரே தடவையில் கொடுப்பனவு செய்ய முடியாமையால் நிதி நிலைமை கருத்திற்கொள்ளப்பட்டு பகுதி பகுதியாக கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 91,120,052 தொகையான பெறவேண்டிய மீதிகளில் ரூபா 37,928,067 இற்கு காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. கிடைக்க வேண்டிய கணக்குகளில் நீண்ட | நிலுவை மீதியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறவேண்டிய கணக்கு களுக்குரிய பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு வருவதுடன் செயற்திட்டங்களுக்காக முற்பணமாக பெற்றுக் கொண்டு அவை நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அவை தீர்வு |

| | | | |
|---|---|---|---|
| | காலமாக இருந்து வரும் தகவல் சமர்ப்பிக்கப்படாத ரூபா 6,098,770 ஆன முற்பண மீதியொன்றும் ரூபா 559,990 ஆன பொது முற்பண மீதியொன்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 761,854 தொகை ஓராண்டிற்கு மேற்ப்டிருந்த மொத்தம் ரூபா 46,283,404 ஆக இருந்தது. | | செய்யப்படாமையால் இவ்வாறான மீதியொன்று காணப்படுகின்றது. தற்போது அந்நிலைமை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | 2018 திசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 61,745,451 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 18,951,330 தொகைக்கு காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத 03 ஆண்டு களை விஞ்சிய மொத்தம் ரூபா 28,109,578 ஆன நிர்மாண கடன்கொடுத்தோர் நிதி காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய கணக்குகளுக்குரிய தகவல்கள் மற்றம் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு நிர்மாண கடன் கொடுத்தோர் மற்றும் மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்வு செய்வதற்கும் மேலும் தீர்வுசெய்வதற்கும் முடியாத மீதியொன்று இல்லாமல் அவை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் சீராக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | மஹவ பொது வியாபாரச் சந்தை தொகுதிக்கு மின்சாரம் பெற்றுக்கொள்ளாமை மற்றும் கதவுகளில் காணப்பட்ட குறைகள் காரணமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கடைகளை குத்தகைக்கு வழங்க முடியாமையால் குறைந்தது ரூபா 3,276,000 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களிலிருந்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மின்சார சபையுடன் கலந்துரையாடியதன் பின்னர் தற்போது மின்சார வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் விரைவில் மின்சாரத்தை வழங்கி கடைகளை வியாபார நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலை இடைநிறுத்தம், இடமாற்றம், சேவையை விட்டுச் செல்லல், போன்ற காரணங்களின் பேரில் நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ஊழியர் கடன் மீதி ரூபா 208,863 ஆக இருந்தது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்படாத ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 மற்றும் பின்னைய ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட 07 தொலைபேசி / தொடர்பாடல் கோபுரங்களிலிருந்து 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடாமையால் அண்ணளவாக ரூபா 152,000 இற்கு மேற்பட்ட வருமானமொன்று சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது. | கட்டணங்கள் அறவிடுவதற்கு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 08 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி சமூக நில அபிவிருத்திக்காக 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டது. அமைச்சரால் அடிப்படைக் கட்டளை கொண்டிருந்த அந்த நிபந்தனைகளின் பரிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டணங்களை அறவிடுவதில் சட்டரீதியான சிக்கல் ஒன்று காணப்படுகின்றது. |
| (ஆ) | அம்பன்போலா முஸ்லிம் பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள செல்டெல் லங்கா தனியார் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான கோபுரங்களை நிர்மாணிக்க தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் | நிர்மாண நடவடிக்கைகள் முறையாக மேற் கொள்ளப்பட வேண்டும். | 2006.11.02 ஆந் திகதிய கடித மூலமும் 2006.11.21 ஆந் திகதிகளில் செல்டெல் நிறுவனத்திற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எழுதிய கடிதத்தின்படி, நிர்மாணப் |

| | | | |
|---|---|---|---|
| | குழு அனுமதி அளிக்கவில்லை. அத்துடன் இதற்கு முன்னர் சபை திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது. பின்னர் கட்டுமானத்தினை நிறுத்து மாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | | பணிகளை நிறுத்துமாறு செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2007.01.11 தலைவராலும் நிர்மாணம் நிறுத்தப்படவேண்டுமெனவும் இல்லையேல் சட்டநடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் எதுவும் அவதானிக்கப்பட வில்லை. |
| (இ) | குறித்த விலை குறிப்பிடப் பட்டு உப விதி பிறப்பிக்கப்படாமல் 07 கோபுரங்களிலிருந்து ஒவ்வொரு கம்பனியிபிருந்து வெவ்வேறு கட்டண அளவு அடிப்படையில் ரூபா 932,400 அறவிடப்பட்டிருந்தது. | மேற்படி (அ) இல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு திட்டவட்டமான அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பாரதி ஹொட்டெல் கம்பனிக்குரிய தலதாகம மஹவ கோபுரத்திற்காகக ரூபா 200,000/- தொகையும் ஹட்சன் டெலிகொம் கம்பனிக்குரிய கோபுரம் மற்றும் லங்கா பெல் தனியார் கம்பனிக்குரிய கோபுரத்திற்காக ரூபா 115,000/- தொகையும் அறவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகை அறவிடப்பட்ட விதம் தொடர்பான குறிப்பொன்று காணப் படவில்லை. அநுராதபுரம் வீதி அபன்பொல செல்டெல் லங்கா கம்பனிக்குரிய கோபுரம் மற்றும் சிங்ஹாரகம, மஹவ டயலொக் கம்பனிக்குரிய கோபுரங்களுகக்ாக கோவயின் பிரகாரம் ரூபா 8,000/- செயன்முறைக் கட்டணங்களாக அறவிடப்பட்டிருந்தது. நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு முன் அவ்வாறான வேலை விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். |

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2019 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த ஆலோசணைகளின் பிரகாரம் குறித்த திகதிகளில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் ஏனைய கடமைகளும் கையளிக்கப்பட்டிருந்தமையால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நி.பி 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முடியுமான வரை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு சுயாதீனமாக வேலை இடமளிக்கப்பட்டுள்ளதாக அறியதருகின்றேன். |